The Amazing Spider-MOE

# யா/நெல்லியடி மெதடிஸ்த மிஷன்
# தமிழ் கலவன் பாடசாலை
## கரவெட்டி.

# வருடாந்த பரிசில்தின விழா
# 2016

# அதிபர் அறிக்கை

## மகுடவாசகம் (MOTTO)

"கற்றாய்ந் தொழுகு"

## தொலை நோக்கு (VISION)

நவீன கலைத்திட்ட மாற்றங்களுக்கு ஏற்ப தரமான கல்வியினூடாக எதிர்கால சவால்களுக்கு இயலுமையாகுதல்

## குறிக்கோள் (MISSION)

- மாறும் நவீன கலைத்திட்ட மாற்றங்களை ஏற்றல்.
- மாணவர் மையக்கல்வியை உறுதிப்படுத்தல்.
- உச்ச பயன் தரும் வகையில் ஆசிரியர் வாண்மை விருத்தியை வலுப்படுத்தல்.
- பயனுறுதியுள்ள கற்றல் முறைகளைப் பிரயோகித்தல்.
- இணைந்த மகிழ்ச்சிகரமான முறைசார் கல்வி நிறுவன மயமாதல்.

# நிகழ்ச்சி நிரல்

- ✧ விருந்தினரை Band அணியுடன் அழைத்து வருதல்
- ✧ மங்கள விளக்கேற்றல்
- ✧ இறை வணக்கம்
- ✧ தமிழ்மொழி வாழ்த்து
- ✧ வரவேற்புரை - திருமதி ற.தர்மலிங்கம் (பகுதித் தலைவர்)
  செல்வன் சி. அனந்திகன் (ஆங்கிலத்தில்)
  (சிரேஷ்ட மாணவத் தலைவன்)
- ✧ வரவேற்பு நடனம் - தரம் 3 மாணவிகள்
- ✧ ஆசியுரை
- ✧ வாழ்த்துரை
- ✧ தலைமையுரையும் அதிபர் அறிக்கையும்
- ✧ ஆங்கில நிகழ்ச்சி குழுப்பாடல் - தரம் 1 & 2 மாணவிகள்
- ✧ தரம் 5 மாணவர் கௌரவிப்பு
- ✧ ஆங்கில குழுப்பாடல் - தரம் 3 & 4 மாணவிகள்
- ✧ நாடகம் - இளங்கோவடிகள் வகுப்பு மாணவர்கள்
- ✧ பரிசில் வழங்கல்
- ✧ குழு நடனம் - தரம் 5 மாணவர்கள் திருவள்ளுவர் வகுப்பு
- ✧ பிரதம விருந்தினர் உரை
- ✧ குழு நடனம் - தரம் 5 கம்பர் வகுப்பு மாணவர்கள்
- ✧ நன்றியுரை ⊕ செல்வி அ. இராஜசுலோசனா (ஆசிரியை)
  ⊕ செல்வி ப. ஆரணி (ஆங்கிலத்தில்)
  (சிரேஷ்ட மாணவத்தலைவி)
- ✧ பாடசாலைக் கீதம்

**யா/ நெல்லியடி மெதடிஸ்த மிஷன்**

**தமிழ் கலவன் பாடசாலை**

**கரவெட்டி.**

# வருடாந்த பரிசில் தினவிழா – 2016

காலம் : 2016.11.12 சனிக்கிழமை மு.ப 9 மணி

இடம் : பாடசாலையின் திறந்த அரங்கு

தலைவர்

**திரு. நடராஜா தேவராஜா** (பாடசாலை முதல்வர்)

முதன்மை விருந்தினர்

**திரு. கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணயோகன்**

(பழைய மாணவர்)

(விரிவுரையாளர், கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி)

சிறப்பு விருந்தினர்

**திருமதி டொறின் மன்மதநாயகம்**

(ஆசிரிய ஆலோசகர், கிறிஸ்தவம், வடமராட்சி வலயம்)

பரிசில் வழங்கி கௌரவிப்பவர்

**திருமதி வனஜா கிருஷ்ணயோகன்**

(ஆசிரியை, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,*
*பெற்றோர், பழைய மாணவர்,*
*பாடசாலை அபிவிருத்திக் குழுவினர்,*
*நலன்விரும்பிகள்.*

## பாடசாலை ஆளணி விபரம்

| | | |
|---|---|---|
| 01. | திரு. ந. தேவராஜா | SLPS III |
| 02. | திருமதி. ற. தர்மலிங்கம் | SLTS I |
| 03. | செல்வி. அ. இராஜசுலோசனா | SLTS I |
| 04. | செல்வி. இ. ஞானராணி | SLTS I |
| 05. | திருமதி. வி. தவேந்திரராசா | SLTS I |
| 06. | திருமதி ச. யோகேந்திரன் | SLTS I |
| 07. | செல்வி ந. மனோராணி | SLTS 2:I |
| 08. | திரு. க. முரளீதரன் | SLTS 2:I |
| 09. | திருமதி ற. பாஸ்கரன் | SLTS 2:II |
| 10. | திருமதி தே. கதிர்காமலிங்கம் | SLTS 2:I |
| 11. | செல்வி து. துஷ்யந்தினி | SLTS 2:II |
| 12. | திருமதி ம. ஏரம்பநாதன் | SLTS 2:I |
| 13. | திருமதி சி. பாலேந்திரன் | SLTS 3:I |
| 14. | திருமதி சி. மகாகேதீஸ்வரன் | SLTS 2:I |
| 15. | திரு. ம. சிவறஞ்சன் | SLTS 2:II |
| 16. | திரு. வீ. லோகநாதன் | PKS |

## கல்வியியற்கல்லூரி உள்ளக பயிற்சி ஆசிரியர்

செல்வி தட்சாயெனி தர்மரட்னம்
செல்வி தாட்சாஜினி தெய்வேந்திரநாதன்
திரு. கணநாதன் அபிமன்யு

## ELRTC ஆசிரியர்கள்

செல்வி கனகசபை கலைப்பிரியா
திருமதி. விஜயபாரத் தயாரதி
திருமதி. யசோதா அரவிந்தன்
செல்வி றாதிகா பாலகிருஷ்ணன்
செல்வி பரராஜசிங்கம் சுஜீபா
செல்வி சியாமளா விமலநாதன்

## இந்த ஆண்டு இடமாற்றம் பெற்று சென்றோர்

| | |
|---|---|
| திருமதி நந்திகா கந்ததாசன் | SLTS 2:I |
| திருமதி ஜெயமணி சிவநடராஜா | SLTS I |
| திருமதி சரோஜினி தேவரஞ்சன் | SLTS I |

## புதிதாக இணைந்துகொண்டோர்

| | |
|---|---|
| திருமதி சிவனேஸ்வரி மகாகேதீஸ்வரன் | SLTS 2:I |
| திருமதி சிந்துஜா பாலேந்திரன் | SLTS 3:I |
| திருமதி சறோஜாதேவி யோகேந்திரன் | SLTS I |

## பாடசாலையில் இயங்கும் குழுக்களும் மன்றங்களும்

- ✧ பாடசாலை அபிவிருத்திக் குழு
- ✧ பாடசாலை முகாமைத்துவ அணி
- ✧ பாடசாலை ஒழுக்காற்றுக் குழு
- ✧ பெறுகைக் குழு
- ✧ தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு
- ✧ பாடசாலைக் கட்டாய வரவுக் குழு
- ✧ பாடசாலை சுகாதாரக் குழு
- ✧ உள்ளக மேற்பார்வைக் குழு
- ✧ நூலக அபிவிருத்திக் குழு
- ✧ அதிபர் ஆசிரியர் ஊழியர் நலன்புரிச்சங்கம்
- ✧ இந்துமா மன்றம்
- ✧ சுற்றாடல் கழகம்

## யா/ நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை

## மாணவர் விபரம் - 2016

| இல | தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01 | 1 | 39 | 33 | 72 |
| 02 | 2 | 36 | 36 | 72 |
| 03 | 3 | 37 | 42 | 79 |
| 04 | 4 | 38 | 33 | 71 |
| 05 | 5 | 39 | 37 | 76 |
| | மொத்தம் | 189 | 181 | 370 |

# யா/ நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை

# கரவெட்டி

# வருடாந்த பரிசில்தின விழா – 2016

# அதிபர் அறிக்கை

இந்த ஆண்டு பரிசில்தின விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் எமது பாடசாலையின் பழைய மாணவனும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளருமாகிய திரு. கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணயோகன் Sir அவர்களே, அவர்தம் பாரியார் திருமதி வனஜா கிருஷ்ணயோகன் ஆசிரியை அவர்களே, சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் வடமராட்சி வலயக் கல்வி அலுவலக கிறிஸ்தவ பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி டொறின் மன்மதநாயகம் அம்மா அவர்களே, சைவ மதகுருமார்களே, கிறிஸ்தவ மதகுருமார்களே, எமது அழைப்பை ஏற்று வருகைதந்துள்ள பிரதிக்கல்விப் பணிப்பாளர்களே, உதவிக் கல்வி பணிப்பாளர்களே, ஆசிரிய ஆலோசகர்களே, அயல் பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, ஏனைய அலுவலக உத்தியோகத்தர்களே, பாடசாலை அபிவிருத்தி குழு செயலாளர் மற்றும் உறுப்பினர்களே, பழைய மாணவர் சங்க தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்களே, எமது பாடசாலை ஆசிரியர்களே, நலன்விரும்பிகளே, பெற்றோர்களே, மாணவர்களே அனைவருக்கும் எமது முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

இன்றைய நாள் எமது பாடசாலையின் ஓர் பொன்னான நாள். இந்த ஆண்டு பெறுபேறுகள் பற்றி அனைவரும் ஒன்று சேர்ந்து அவற்றை பகுத்து ஆராய்ந்து பாடசாலையின் முன்னேற்றம் பற்றியும் நலிவான விடயங்கள் பற்றியும் பல சிந்தனைகளை மனதில் இருத்திக் கொள்வதுடன் அடுத்த ஆண்டுக்கான ஒரு திட்டமிடும் நாளாகவும் கருதலாம்.

இன்றைய விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் பழைய மாணவரான திரு. கிருஷ்ணபிள்ளை சிவயோகன் Sir அவர்கள்

எமது பாடசாலையில் ஆரம்ப கல்வியையும் நெல்லியடி மத்திய கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும் கற்று உயர்கல்வியால் உயர்வு பெற்று ஆசிரியராக பணியாற்றி இன்று கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளராக பணியாற்றுகின்றார். இத்தகைய உயர்நிலை பெற்ற பழைய மாணவரை கௌரவிக்க வேண்டியது எனது பாடசாலையின் பொறுப்பாகும். அந்தவகையில் அவரையும் அவரது பாரியாரையும் அழைத்து கௌரவிப்பதில் எமது பாடசாலை சமூகம் பெருமை அடைகின்றது.

அடுத்து சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் வடமராட்சி கல்வி வலயத்தில் கிறிஸ்தவ பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி டொறின் மன்மதநாயகம் அவர்கள் எமது பாடசாலை மீது அதிகம் மதிப்பும் நல் அக்கறையும் உடையவர். எமது உயர்வுகள் பற்றியும் பலவிடங்களிலும் பேசிக்கொள்வார். நூலகத்திற்கு பொறுப்பாக இருந்து எமது நூலக வளர்ச்சியிலும் பெரும் அக்கறை கொண்டவர். அவரையும் இந்நாளில் அழைத்து கௌரவிப்பதில் எமது பாடசாலை பெருமகிழ்வு அடைகிறது.

அடுத்து எமது பாடசாலை வடமராட்சி வலயத்தில் உள்ள ஆரம்ப பாடசாலைகளில் முதன்மையானது. அனைவரது உள்ளத்திலும் அரசடி என்றால் அது பெருமைக்குரிய பாடசாலை என்று கூறுவதில் பெருமை கொள்ளக்கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய நிலையில் இவ் வடமாகாண கல்வி அமைச்சு மற்றும் மத்திய கல்வி அமைச்சினால் எமது பாடசாலை முன் மாதிரி ஆரம்பப் பாடசாலையாக வலயக்கல்வி அலுவலகத்தின் துணையுடன் அயலிலுள்ள பாடசாலை நல்ல பாடசாலை (Nearest school is the best school) என்ற திட்டத்தின் கீழ் உள்வாங்கப் பட்டு பல வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையில்,

- ✧ சிறுவர் முற்ற விஸ்தரிப்பும் புதிய உபகரணங்கள் பொருத்தலும்
- ✧ சிறுதிருத்தத்தின் மூலமாக வர்ணம் பூச்சு வேலைகள்
- ✧ மலசலகூட வேலைகளில் புதிதாக wash room அமைக்கப் படுகின்றமை.
- ✧ Primary learning Resource centre என்ற வகையில் இரண்டுமாடி கட்டடம் என்பன.

2016 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டமாகவும் அதேவேளை 2016 - 2020 வரை ஏனைய பல வேலைத்திட்டங்களிலும் உள்வாங்கப் பட்டு இருப்பது இங்கு சிறப்பாக குறிப்பிடவேண்டியது. எனவே இதனை சிறப்புற உள்வாங்க உதவிய வலயக்கல்விப் பணிப்பாளர், மாகாண கல்விப் பணிப்பாளர், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், கல்வி அமைச்சு அதிகாரிகள் ஆகியோருக்கு எமது நன்றிகள்.

இன்று நாம் இருந்த அரங்கை இழந்து தற்காலிக கொட்டகையில் இவ்விழா நடைபெறுவதையிட்டு மனச்சலிப்பு அடையலாம். ஆனால் ஒன்றை பெறவேண்டுமாயின் ஒன்றை இழக்கவேண்டி வருவது இயல்பு. எனவே எமது பழைய கட்டடத்தினை நாம் இழந்தாலும் எமது பாடசாலை நவீன வசதிகள் கொண்டதாக கட்டடம் கிடைக்கின்றமை எமது கடந்த கால கோரிக்கைகளை நிறைவுசெய்வதாக அமைவதுடன் இட வசதிகள் மேம்பட்டு பாடசாலை புதியதொரு தோற்றத்தில் காட்சிகொடுக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கல்விச் செயற்பாடுகள்

எமது பாடசாலை ஆண்டுதோறும் வடமராட்சியின் முன்னணிப் பாடசாலை என்ற பெயரைத் தக்கவைத்துக் கொண்டிருப்பது இங்கு குறிப்பிடக்கூடிய பிரதான அம்சம். எனவே, இப் பாடசாலையின் பாட செயற்பாடுகளும் பாட புற செயற்பாடுகளும் சிறப்பாக அமைய எமது அர்ப்பணிப்பான ஆசிரியர்களின் பணி மகத்தானது. நேரகாலம் பாராது தமக்கு வழங்கப்பட்ட வேலைகளை செவ்வனே செய்வதில் ஆசிரியர்கள் பழக்கப்பட்டவர்கள். புதிதாக வருபவர்களும் இத்தகைய நிலைமைக்கு தம்மை சுதாகரித்து செயற்படுவதனால் தொடர்ந்தும் எமது பாட செயற்பாடுகளும் பாட புற செயற்பாடுகளும் வெற்றி அளிக்கின்றன. இந்த வகையில் இதற்கு பெற்றோர்கள் மிகவும் மனம் வைத்து செயற்பட வேண்டும். வகுப்பாசிரியர்களின் மீது நம்பிக்கை வைத்து செயற்பட வேண்டும். பிள்ளைகளின் வீட்டு வேலைகளையும் மற்றும் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டும். மாணவர்களை அதிக வகுப்புக்களுக்கு அனுப்பி கஷ்டப்படுத்தாது எமது செயற்பாடுகளுக்கு ஒத்துழைத்தால் அதிக பெறுபேறுகளை அடையலாம். தேசிய மட்டம் வரை சாதனைகளைப் படைக்கலாம். அனைத்து மாணவர்களும் புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் எடுப்பதற்கு பெற்றோர்கள் ஒத்துழைக்க வேண்டும். இந்த ஆண்டு 76 மாணவர்கள் புலமைப்பரிசில்

பரீட்சைக்கு தோற்றி 28 பேர் வெட்டுப்புள்ளிகளுக்கு மேலும் 32 மாணவர்கள் 100 புள்ளிக்கும் வெட்டுப்புள்ளிக்கும் இடையிலும் 13 மாணவர்கள் 70 புள்ளிக்கும் 100 புள்ளிகளுக்கும் இடையிலும் 3 மாணவர்கள் 70 இற்கு குறைவான புள்ளிகளையும் பெற்றனர். இதில் 70 இற்கு குறைய எடுப்பது என்பது மாணவர்களது 5 வருட படிப்பை கேள்விக்குறியாக்குகிறது. இந்நிலை மாறவேண்டும். அனைத்து மாணவர்களும் 100 புள்ளிகள் என்ற இலக்குடன் செயற்படவேண்டியது கட்டாயமானது ஆகும். எனவே இந்த ஆண்டு பெறுபேறுகள் எமக்கு இன்னும் பெருமை சேர்ப்பதாக உள்ளது. காரணம் செல்வன் அனுராகாந்தன் விஷ்வகாந்தன் 190 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் நான்காம் இடத்தையும் அதேவேளை வலய மட்டத்தில் முதலாமிடத்தையும் பெற்றுத்தந்தார். எமது பாடசாலையின் இவ் வெற்றிக்காக உழைத்த அனைத்து ஆசிரியர்களுடன் தரம் 5 மாணவர்களை கற்பித்து சிறப்படைய வைத்த செல்வி அ. இராஜசுலோசனா ஆசிரியை, திருமதி ற. பாஸ்கரன் ஆசிரியை, திருமதி சி. பாலேந்திரன் ஆசிரியை ஆகியோருக்கு எமது நன்றிகளும் பாராட்டுக்களும்.

இந்நிலையில் ஆரம்ப பாடசாலையின் வளர்ச்சி சுட்டியாக அனைவராலும் எதிர்பார்க்கப்படுவது தரம் - 5 புலமைப்பரிசில் பெறுபேறு ஆகும். இதனை நாம் தக்க வைக்க வேண்டியது எமது கட்டாய கடமை ஆகும்.

வடமராட்சி பிரதேசம் கல்வியில் உயர்வு பெற்ற பிரதேசம். எம்மை பொறுத்தவரை நல்ல கற்றோரை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றது. ஏனெனில் தரம் 1 - 5 வரை மாணவர்கள் கல்வி கற்றாலும் அவர்களை நல்ல செயற்றிறன் மிக்கவர்களாக உருவாக்குவதில் அதிக வெற்றி கண்டுள்ளது. இன்று பிள்ளைநேய பாடசாலையாக செயற்படும் நிலையில் மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் கல்வி செயற்பாடுகளில் பெற்றோர் அதீத அக்கறை காட்டாது விட்டால் மாணவர்களின் கல்வி தரம் வீழ்ச்சி கண்டுவிடும். இதற்கு மாணவர்களை ஆக்கிரமித்துள்ள நவீன இலத்திரனியல் சாதனங்கள் அவர்களின் நேரத்தை வீணடிப்பதனை நாம் கண்டுகொள்கின்றோம். இவை பற்றி பெற்றோர் சிந்திப்பது இன்றியமையாத ஒன்று என்பதனை இங்கு கூறி வைக்க விரும்புகின்றேன்.

## ஆசிரிய மகாநாடு

இந்த ஆண்டு வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம் நடாத்திய ஆசிரிய மகாநாட்டுக்கு எமது பாடசாலை சார்பாக ஆக்கங்களைக் காட்சிப்படுத்தியிருந்தோம். இதில் திரு. க. முரளீதரன், திருமதி சி. மகாகேதீஸ்வரன், செல்வி இ. ஞானராணி, செல்வி து. துஷ்யந்தினி ஆகியோர் பங்கெடுத்தனர்.

இந்த ஆண்டு மத்திய மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகள் எமது பாடசாலைக்கு விஜயத்தினை மேற்கொண்டிருந்தனர். இதன்போது எமது பாடசாலை சமூகம் அவர்களை சிறப்புற வரவேற்றதுடன் பாண்பாட்டு உணவுகளை வழங்கியும் சிறப்பான விருந்துபசாரத்தினை மேற்கொண்டோம். இவ் விஜயத்தின்போது மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சின் செயலாளர் உட்பட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர். இதேவேளை அன்பின் கல்விக்கூட திட்டத்தின் பிரகாரம் எமது பாடசாலை மாத்தளை ஸ்ரீ நாக மாதிரி ஆரம்ப பாடசாலையுடன் (Maththalai Sri Naga model Primary School) தொடர்புகளை பேணி வருகின்றது. இதற்கு பொறுப்பாசிரியராக செல்வி து. துஷ்யந்தினி ஆசிரியை செயற்படுகின்றார்.

## பௌதிக வளம்

இப்பாடசாலையைப் பொறுத்தவரை பெரும்பாலான பௌதிக வளங்கள் யாவும் நிறைவுசெய்யப்பட்டாலும் காலத்தின் தேவைக்கேற்ப புதிய வளங்களை நாம் தேடவேண்டிய தேவையுள்ளது. எனவே எமது பாடசாலையின் பௌதிக வளங்களில் அதிக வளங்களை சேர்ப்பதற்கு உதவிய மாகாண கல்வித் திணைக்களம், வலயக்கல்வித் திணைக்களம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் ஆகியோருக்கு எமது நன்றிகள்.

இந்த ஆண்டு எமது பாடசாலைக்கு சிறுவர் முற்ற வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டபோது அதன் மீதிப் பணத்தில் அலுவலக மேல்மாடி லெவல் சீற் அடிக்கப்பட்டு வகுப்பறை அழகுபடுத்தப்பட்டது. அத்துடன் அதன் மிகுதி வேலைகளை கௌரவ மாகாணசபை உறுப்பினர் திரு. வே. சிவயோகன் அவர்கள் ஒதுக்கிய 100000/= ரூபாவில் (நூறாயிரம்)

முடிக்கப்பட்டது. அடுத்து கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் M.A. சுமத்திரன் அவர்கள் மூலம் ரூபா 50000/= (ஐம்பதாயிரம்) ஒதுக்கீட்டில் ஐந்து வகுப்பறை அலுமாரிகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. தொடர்ந்தும் கணனி வசதியை மேம்படுத்தும் முகமாக பழைய மாணவன் திரு. சோ. யாதவன் (Hari Eng) அவர்கள் கணனி அறைக்கான மாபிள் பதித்து கண்ணாடி ஜன்னல்கள் அமைத்து வர்ணப்பூச்சு வேலைகளையும் செய்துதந்தார். அத்துடன் பழைய மாணவரான நவரட்ணம் வாணிதாசன் (லண்டன்) அவர்கள் இரண்டு கணனிகளையும் இரண்டு கணினி மேசைகளையும் கொள்வனவு செய்து தந்தார்.

அடுத்து யா/ நெல்லியடி மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் மெல்பேண் அவஸ்ரேலியா கிளையூடாக ஒரு கணினியும் அதற்கான மேசையும் பெற்றுக்கொள்ளப்பட்டது. இதன்மூலம் எமக்கு தேவையான கணினிகள் கிடைக்கப்பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது.

## இணைபாடவிதான செயற்பாடுகள்

இணைபாடவிதான செயற்பாடுகளான திருக்குறள் மனனம், தமிழ்த் தினப்போட்டி, விரைவு கணிதம், ஆங்கில தினம், சதுரங்கம், சிறுவர் அரங்கு, விளையாட்டுப்போட்டி, செயற்பட்டு மகிழ்வோம், சித்திரப் போட்டி ஆகியவற்றில் அதிக பங்களிப்புக்களை செலுத்தி வந்துள்ளோம். இந்த ஆண்டு பல போட்டிகள் வலய மட்டம் வரையே நடைபெற்றுள்ளன. எதிர்வரும் வாரங்களில் மாகாண மட்ட போட்டிகள் நடைபெறும்போது அதில் வெற்றிபெற வேண்டுமென வாழ்த்துகின்றேன். இதற்காக உழைத்த ஆசிரியர்களுக்கு எமது நன்றிகள். இதேவேளை சதுரங்க போட்டிக்காக மாணவரை தயார்ப்படுத்தும் வடமராட்சியின் சதுரங்க விற்பன்னராகிய திரு. திருச்செல்வம் Sir அவர்கள் எமது பாடசாலை மாணவர்களுக்கு எதுவித ஊதியமும் பெற்றுக்கொள்ளாது பயிற்சியை வழங்கி வருகின்றார். அவருக்கு எமது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்வு அடைகின்றேன். அவருக்கு இறையருள் கிடைப்பதுடன் இன்னும் நீண்ட காலம் சேவைசெய்ய வாழ்த்துகின்றேன்.

இந்த ஆண்டும் அகில இலங்கை கல்விச் சுற்றுலாவை எமது பாடசாலை மேற்கொண்டு இருந்தது. குறிப்பாக அநுராதபுரம், சிகிரியா, தம்புள்ள, கண்டி, நுவரெலியா, பின்னவெல போன்ற இடங்களுக்கான

சுற்றுலாவினை மேற்கொண்டதுடன் கண்டி விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்திற்கு தரிசனம் செய்யக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. இச் சுற்றுலா மாணவர்கள் பெற்றோர் ஆசிரியர்களுக்கு ஓர் விழிப்புணர்வையும் அதேவேளை சிறந்ததொரு உத்வேகத்தையும் வழங்குவதாக அமைந்து இருந்தது.

தமிழ்த்தினப் போட்டிக்கு எமது பாடசாலையில் பொறுப்பாக இருக்கும் செல்வி இராஜசுலோசனா அமிர்தலிங்கம் ஆசிரியை அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் மாணவர்களை சிறப்பாகப் பயிற்றுவித்து மாகாண மட்டம்வரை வெற்றிபெற வைத்ததுடன் அவர் ஏனைய பல வேலைத் திட்டங்களை பாடசாலையில் முன்னெடுத்து வருகின்றார். குறிப்பாக அவருடைய செயற்பாடு காரணமாக தேசிய மட்டம் வரை கூட மாணவர்களை அனுப்புவதற்கான வாய்ப்பு உள்ளது. எதிர்காலத்தில் பெற்றோர்கள் அதிகளவில் ஒத்துழைத்தால் மேற்படி போட்டியில் சாதனை படைக்க முடியும். ஆகவே பல்வேறு செயற்பாடுகளையும் செவ்வனே ஆக்கி சிறந்த ஒரு முன்மாதிரியான ஆசிரியராக எமது பாடசாலையில் செயற்பட்டு வருகின்றார். இவருக்கு எமது நன்றிகளையும் பாராட்டுக் களையும் தெரிவிப்பதோடு சுகதேகியாக இருந்து பணியாற்ற இறைவனை வேண்டுகின்றேன்.

## ஆண்களுக்கான Band

பிள்ளைநேய பாடசாலை ஒன்றில் பால் சமத்துவம் பேணுவதன் அடிப்படையில் ஆண் மாணவர்களுக்கும் band பழக்கவேண்டிய தேவை இருந்ததினால் தற்போது 2013ஆம் ஆண்டு தொடக்கம் இதனையும் நிறைவேற்றி வருகின்றோம். இதன் பிரகாரம் இன்றும் தரம் 5 ஆண் மாணவர்களின் band அணிவகுப்பு சிறப்பாக நடைபெற்றது. இதனை நெறிப்படுத்திய தரம் 5 ஆசிரியர்களான திருமதி றஜிதா பாஸ்கரன், திருமதி சிந்துஜா பாலேந்திரன், செல்வி அமிர்தலிங்கம் இராஜசுலோசனா ஆகியோருக்கு எமது நன்றிகள். இதனை வழிப்படுத்தி உதவிய பழைய மாணவர்களான செல்வன் யோகலிங்கம் சயந்தன், செல்வன் வெற்றிவேல் கிருஷாத் ஆகியோருக்கும் எமது நன்றிகள். இத்துடன் பெண்களுக்கான band அணியும் சிறப்பாக செயற்படுகிறது. இதற்காக உழைத்த ஆசிரியர்களான திருமதி ற. தர்மலிங்கம், செல்வி து. துஷ்யந்தினிக்கு எமது நன்றிகள்.

## இந்துமா மன்றம்

எமது பாடசாலையில் மிகச் சிறப்பான மன்றமாக இது செயற்பட்டு வருகின்றது. வெள்ளி ஆராதனையின்போது மாணவர்களுக்கான பல அறிவுத் தேடல்களை இது வழங்கி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. குருபூஜைகள் மற்றும் வாணிவிழாவின்போது பல்வேறு போட்டிகளை நடாத்தி பரிசில்களை வழங்குவதுடன் கலை நிகழ்வுகளை நடாத்தியும் சிறப்பாகச் செயற்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## பழைய மாணவர் சங்கம்

எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் மிகவும் முக்கியமானதொன்று. எத்தனையோ பல மாணவர்கள் புலம்பெயர் தேசங்களிலும் இருந்து உதவ முன்வரக்கூடிய நிலையில் உள்ளனர். இதற்கு எமது சங்க செயற்பாடுகளை இன்னும் வலுப்படுத்தி எதிர்காலத்தில் ஓர் உன்னத சங்கமாக புலம்பெயர் நாடுகளிலும் எமது கிளைகளை விரிவாக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

## கனடா, லண்டன், அமெரிக்காவில் புலம்பெயர்ந்து வாழும் உறவுகளின் NCC புலமைப்பரிசில் நிதி

நெல்லியடி சனசமூக நிலையமும் புலம்பெயர் உறவுகளும் இணைந்து கற்றலில் ஊக்கமுள்ள வசதி குறைந்த மாணவர்களுக்கு தரம் 5 இல் 10 மாதங்கள் ஊக்குவிப்பாக தலா 500 மாதாந்தம் வழங்கி அவர்களை கற்றலில் ஊக்குவிப்பதுடன் அவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெறும்போது அவர்களை ஊக்குவிக்க பெறுமதியான பரிசில்களை வழங்குவதுடன் இடைநிலைக் கல்வியிலும் இவ் உதவியை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர். இத்தகைய புலம்பெயர் உறவுகளுக்கு எம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது பாடசாலையில் 2015 இல் 15 மாணவர்களுக்கும் 2016 இல் பதினைந்து மாணவர்களுக்கும் உதவி வழங்கியதுடன் 2017 இல் இருபது மாணவர்களுக்கு உத்வியளிக்க முன்வந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## இந்த ஆண்டுக்கான பாடசாலை செயற்பாடுகள்

- ✧ தரம் 01 மாணவர்களின் கால்கோள் விழா மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. இத்துடன் தரம் 3 மாணவர்களின் மகிழ்ச்சி கரமான ஆரம்பம் நிகழ்வும் நடைபெற்றது. இதன் பிரதம விருந்தினராக உயர்திரு. வே. விசுவலிங்கம் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.
- ✧ இல்ல மெய்வன்மைப் போட்டி 2016.02.05 ஆந் திகதி நடைபெற்றது. இதன் பிரதம விருந்தினராக திரு. பொன்னையா (கோட்டக் கல்வி அலுவலர்) அவர்களும் அவர் பாரியாரும் Hari Eng. உரிமையாளர் திரு. சோ. யாதவன் கலந்து சிறப்பித்தனர்.
- ✧ பாடசாலை மட்ட ஆடிப்பிறப்புக் கொண்டாட்டம் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது.
- ✧ மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டல் நிகழ்வு சிறப்பாக கொண்டாடப்பட்டது.
- ✧ சித்திரை வருடப்பிறப்பு, பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப் பட்டது.
- ✧ மத்திய மாகாண கல்வியமைச்சு அதிகாரிகளின் வருகை சிறப்பான முறையிலே அமைந்திருந்தது.
- ✧ ஆசிரியர் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதன் பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. யோ. ரவீந்திரன் (கல்வி நிர்வாகம்) அவர்கள் கலந்து சிறப்பித்தார்.
- ✧ அடுத்து வாணிவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதன் பிரதம விருந்தினராக சிவன் பவுண்டேசன் ஸ்தாபகர் திரு. கணேஸ்வரன் வேலாயுதம் அவர்களும் சிறப்பு விருந்தினராக திரு. நகுலேந்திரன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## இந்த ஆண்டிற்கான அன்பளிப்புக்கள்

- ✧ 2016ஆம் ஆண்டிற்கான கால்கோள் விழா மிகச் சிறப்பாக தரம் 2 மாணவர்களின் பெற்றோர்களின் அனுசரணையில் நடைபெற்றது.
- ✧ 2016ஆம் ஆண்டிற்கான விளையாட்டு விழா பெற்றோர்களின் அனுசரணையில் சிறப்பாக நடைபெற்றது. இதற்கு Dr. க. செந்தூரன்

அவர்கள் 20000/= (இருபதாயிரம் ரூபா) செலவில் ஒரு தொகுதி பரிசில்களை கொள்வனவு செய்து தந்தார். இவருடன் பெற்றோர் களான திரு. S. சிறிதரன், திரு. இ. சுந்தரலிங்கம், திரு. இ. மணிவண்ணன், Dr. சு. குமரன், திரு. ஜெயந்தன் ஆகியோர் தலா ஐயாயிரம் வீதம் பங்களித்து ஏனைய பரிசில்கள் மற்றும் அனுசரணைகளை ஏற்றனர். இதேவேளை திரு. முகுந்தன், திரு. சு. ஜெயதீசன், திரு. சி. பிரபாகர குருக்கள், திரு. செ. யோகராசா, திருமதி ஜெ. சுரேஸ்குமார், திருமதி வி. சுகந்தா, திருமதி. குபேந்திரராசா, திரு. பூ. சவுந்தர், திருமதி க. ஜெயகாந்தன், திரு. ஜெயகாந்தன், திரு. வ. குபேந்திரன், திருமதி மோ. கிருஷ்ணானந்தன், திரு. ந. மோகனதாஸ், திரு. சி. ரஜனிக்காந், திரு. மா. அழகேசன் ஆகியோர் அனுசரணைகளை வழங்கினர். திரு. ஜெ. சிவகுமார் மாணவர்களுக்கான தகர கொட்டகைகளை வழங்கி உதவினார்.

- ✧ திரு. சோ. யாதவன் Hari Eng அவர்கள் கணனியறையினை மாபிள் பதித்து நவீனமுறையில் திருத்தம் செய்து தந்தார்.
- ✧ லண்டன் வாழ் பழைய மாணவர் திரு. நவரட்ணம் வாணிதாசன் இரண்டு கணனிகள் அவற்றுக்கான மேசை அன்பளிப்பு செய்தார்.
- ✧ யா/ நெல்லியடி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் மெல்பேண் அவுஸ்ரேலியா கிளையூடாக ரூபா 48500 செலவில் கணனி ஒன்றும் அதற்குரிய மேசை ஒன்றினையும் 4000 செலவில் வழங்கியதுடன் தரம் 4 மாணவர்களுக்கு 7500 பெறுமதியான புத்தகங்களை வழங்கி உதவினர்.
- ✧ சிவன் பவுண்டேசன் ஸ்தாபகர் திரு. கணேஸ்வரன் வேலாயுதம் அவர்கள் 30 அடி தகரப் பந்தலுக்காக ரூபா நூறாயிரத்தை வழங்கி உதவினார்.
- ✧ திரு. வீ. திவ்வியநாதன் அவர்கள் பரிசில்தின பரிசில் கொள்வனவுக் காக ரூபா 10000/= இனை SDA க்கு வழங்கியுள்ளார்.
- ✧ திரு. தங்கவேலாயுதம் கேம்பிறிஜ் கலாசாலை நிர்வாகி அவர்கள் பரிசில் கொள்வனவுக்காக ரூபா 5000/= இனை SDA க்கு வழங்கியுள்ளார்.
- ✧ நெல்லியடி மக்கள் வங்கி 10000/= ரூபாவும் நெல்லியடி இலங்கை வங்கி ரூபா 7500/= ரூபாவும் நெல்லியடி செலான் வங்கி 5000/=

ரூபாவும் நெல்லியடி தேசிய சேமிப்பு வங்கி ரூபா 2000/= ரூபாவும் வழங்கியுள்ளனர். இவையும் SDA இல் வரவு வைக்கப்பட்டு செலவு செய்யப்படுகிறது.

- கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு. வே. சிவயோகன் அவர்களால் ரூபா நூறாயிரம் ஒதுக்கப்பட்டு அதன்மூலம் வகுப்பறை களுக்கு லெவல் சீற் அடிக்கப்பட்டது.
- கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் M.A சுமத்திரன் ஒதுக்கிய 50000/= ரூபா நிதி வகுப்பறைக்கான அலுமாரி வாங்க உதவியது.
- ஆசிரியர் தினத்தினை தரம் 5 இல் குறிப்பிட்ட சில பெற்றோரும் பழைய மாணவர் சங்கமும் இணைந்து நடாத்தினர்.
- பிரம்மஸ்ரீ சி. பிரபாகரக்குருக்கள் அவர்கள் 70 இற்கும் வெட்டுப் புள்ளிக்கும் இடையில் பெற்ற 45 மாணவர்களுக்கு வெற்றிப் பதக்கங்களை ரூபா 12600/= செலவில் பெற்றுத் தந்தார்.
- திரு. ஜெ. சிவகுமார் பெற்றோர் வாணிவிழாவிற்கு தகர கொட்டகை களை இலவசமாக அமைத்ததுடன் இன்றைய விழாவிற்கும் அதனை செய்துள்ளார்.
- திரு. இராஜரஞ்சன் விளையாட்டுப் போட்டிக்கான VDO அன்பளிப்பு. இன்றும் அதனை மேற்கொள்கின்றார்.
- அமரர் திருமதி அன்பழகன் அமுதா ஞாபகார்த்த புலமைப் பரிசில் தலா ஆயிரம் வீதம் ஐந்து மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

## இன்னும் தீர்க்கப்பட வேண்டிய தேவைகள்

- எமது பாடசாலைக்கு நிரந்தர ஆங்கில ஆசிரியர் ஒருவர் நியமிக்கப் பட வேண்டும்.
- புதிதாக களஞ்சிய அறையுடன் இணைந்ததான சமையல் அறை ஒன்று அமைக்கப்பட வேண்டும்.
- பாடசாலையில் வாகன தரிப்பிடம் அமைக்கப்பட வேண்டும்.
- இலத்திரனியல் மணி ஒன்று தேவை. காரணம் பாடசாலையின் அமைப்பு தொடர்புகளுக்கு கடினமாக உள்ளது.
- பாடசாலையின் உள்தொடர்புகளுக்காக உள்ளக தொலைபேசி (intercom) ஒன்று இணைக்கப்பட வேண்டும்.

- ✧ பாடசாலையுடன் இணைந்ததாக விளையாட்டு மைதானம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.
- ✧ தரம் 5 மாணவர்களுக்கு உரிய வகை தளபாடம் உருவாக்கப்பட வேண்டும்.
- ✧ நிரந்தரமான சுத்திகரிப்பு தொழிலாளி நியமிக்கப்பட வேண்டும்.
- ✧ மேடையுடன் இணைந்த ஒன்றுகூடல் மண்டபம் தேவை.
- ✧ அயலில் உள்ள காணி கொள்வனவு செய்யப்பட வேண்டும்.

## என்றென்றும் நன்றிக்கு உரியவர்கள்

- ✧ எமது பாடசாலை செயற்பாடுகளுக்கு பக்கபலமாக இருக்கும் மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் அலுவலர்கள்
- ✧ வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அலுவலர், உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள்
- ✧ கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், கௌரவ மாகாணசபை உறுப்பினர்கள்
- ✧ பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் திரு. யோ. சசிக்காந்தன் மற்றும் வலயப் பிரதிநிதி திருமதி க. கிருஸ்ணசிங்கம் மற்றும் உறுப்பினர்கள்
- ✧ பழைய மாணவர் சங்க தலைவர் மு.ச. சுப்ரமணியம், செயலாளர் வ. மகீபன், பொருளாளர் சி. பாலமுருகன், ஏனைய உறுப்பினர்கள்
- ✧ மதிய உணவுக்காக தேவையேற்படும்போது சமையல் வேலைக்கு உதவி வழங்கும் பெற்றோர்கள்
- ✧ பாடசாலை துப்பரவு பணிபுரியும் திரு. ஜ. தேவராசா
- ✧ கலை நிகழ்வுகளை பழக்க உதவும் பழைய மாணவி சீதாலக்ஷ்மி மதுசூதனன்
- ✧ ஆங்கில ஆசிரியருக்கு மாதாந்த வேதனம் ரூபா 5000/= வழங்கிவரும் பழைய மாணவரான கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் சி. முகுந்தன் அவர்கள்

- இன்றைய நிகழ்விற்கு அனுசரணையாளர்களாக இருக்கும் தரம் 5 பெற்றோர்
- எமக்கு பேருதவியாக இருக்கும் பாடசாலைப் பணியாளர் திரு. வீ. லோகநாதன்
- இன்றைய விழாவிற்கு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் நிதியங்களை செயற்படுத்தும் இந்திராணி பாஸ்கரன் புலமைப் பரிசில் நிதியத்தார் மற்றும் 2011 தரம் 5 பெற்றோர், 2012 தரம் 5 பெற்றோர், 2013 தரம் 5 பெற்றோர், 2014 தரம் 5 பெற்றோர் உருவாக்கிய நிதியங்கள்
- இன்றைய விழாவிற்கு அனுசரணை வழங்கும் மக்கள் வங்கி, இலங்கை வங்கி, செலான் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி
- NCC புலமைப்பரிசில் நிதியத்தினர்
- 5 மாணவர்களுக்கு சேமிப்பு வைப்புப் புத்தகங்களை தலா 1000 வீதம் வைப்புச்செய்து வழங்கும் திருமதி அமுதா அன்பழகன் குடும்பத்தினர்
- இரண்டு மாணவர்களுக்கு சேமிப்புப் புத்தகங்களை வழங்கும் திரு. A. சதீஸ்குமார்
- எமது பாடசாலையின் முன்னேற்றத்திற்கு அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கும் அத்தனை ஆசிரியர்கள்
- அவ்வப்போது வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்கும் எமது பழைய மாணவரான பொறியியலாளர் திரு. தம்பிராசா வசந்தகுமார்
- இவ்வறிக்கையினை அச்சுப் பதித்து வெளியீடு செய்த தமிழ்ப்பூங்கா அச்சகத்தினர்.

## யா/ நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை 2016 தரம் - 05
## புலமைப்பரிசில் பரீட்சைப் புள்ளிகள்
## வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றோர் விபரம்

| தொ. இல. | மாணவர் பெயர் | புள்ளி | மாவட்ட நிலை |
|---|---|---|---|
| 1 | அநுராகாந்தன் விஸ்வகாந்தன் | 190 | 4 |
| 2 | இரஞ்சிதன் துஷோபன் | 185 | 19 |
| 3 | பத்மராஜா டேனுஷன் | 181 | 37 |
| 4 | சிவகணேசன் அனந்திகன் | 180 | 45 |
| 5 | பகீரதன் ஆரணி | 176 | 94 |
| 6 | பரணீதரன் ரிஷிகேசன் | 174 | 131 |
| 7 | ஆனந்தராஜா ஸ்ரீசன் | 172 | 176 |
| 8 | ஜெயகாந்தன் ஆற்றலன் | 169 | 253 |
| 9 | குமரன் பைரவி | 168 | 281 |
| 10 | செல்வராஜா கோபிகன் | 166 | 340 |
| 11 | சிறிகந்தசேகரம் ஆரபி | 166 | 340 |
| 12 | முகுந்தன் ஜகஜித் | 165 | 377 |
| 13 | வரதராஜா அதிஷயன் | 165 | 377 |
| 14 | நித்திலவர்ணன் தக்ஷனா | 165 | 377 |
| 15 | ஜெயபாலராஜா காத்யாயினி | 164 | 421 |
| 16 | சிவா ஸ்வேதனா | 163 | 467 |
| 17 | கஜேந்திரன் கவிவர்ஷா | 163 | 467 |
| 18 | அரவிந்தன் வேணுகன் | 162 | 536 |
| 19 | பிரபாகரன் கரிஸ்மி | 160 | 635 |
| 20 | சுகந்தன் யுகதாரகா | 159 | 687 |
| 21 | ஞானமூர்த்தி நீரஜா | 159 | 687 |
| 22 | திலகநாதன் நயனி | 159 | 687 |
| 23 | திலீபன் சந்தோஷ் | 156 | 870 |
| 24 | இராஜரஞ்சன் சாம்பவி | 155 | 931 |
| 25 | சிவராஸ் ராகவி | 153 | 1048 |
| 26 | ஜயந்தன் சஹானா | 153 | 1048 |
| 27 | தேவராஜா விதுசனன் | 152 | 1117 |
| 28 | சூரியஜெயா மலரவன் | 152 | 1117 |

## 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் விபரம்

| தொ.இல. | மாணவர் பெயர் | புள்ளி |
|---|---|---|
| 29 | குலதேவன் கருணியா | 150 |
| 30 | சிவசுப்பிரமணியம் பிரேமிகா | 150 |
| 31 | தீசன் சாதுஷன் | 148 |
| 32 | வாகீசன் உமாசுதன் | 148 |
| 33 | ரஜனிகாந் லம்சிகா | 147 |
| 34 | பிரகலாதேவன் தணிகைச்செல்வி | 147 |
| 35 | சுதர்சன் சாரங்கி | 146 |
| 36 | பாஸ்கரன் ஹரிசாந் | 144 |
| 37 | ஜீவபாபு அபினேஷ் | 143 |
| 38 | ரவீந்திரன் அக்ரஷன் | 142 |
| 39 | ஜெயரூபன் ஷர்னிதா | 142 |
| 40 | முருகதாஸ் பவித்திரன் | 136 |
| 41 | சதீஸ்குமார் இசானி | 136 |
| 42 | விஜயராஜ் ஆகாஸ் | 135 |
| 43 | ஸ்ரீகரன் மானசா | 134 |
| 44 | பிரபாகரன் லாவண்யசர்மா | 133 |
| 45 | இராஜகோபால் நிதுசன் | 133 |
| 46 | குணசேகரம் ஹம்சா | 130 |
| 47 | ஜெயகாந்தன் கானுஜா | 128 |
| 48 | சுதாகரன் அகல்விழி | 119 |
| 49 | லோகநாதன் அபிஷாயினி | 119 |
| 50 | கனகலிங்கம் லிபீசன் | 119 |
| 51 | செல்வநாயகம் அபிஷேக் | 119 |
| 52 | முகுந்தராஜ் பிரஜின் | 118 |
| 53 | ரஜனிகாந்தன் சானியா | 115 |
| 54 | தெய்வேந்திரன் பவதாரணி | 113 |
| 55 | கணேஸ் விபுஷா | 113 |
| 56 | தில்லைநாதன் வினுஷாந் | 111 |
| 57 | ரமணேஸ்வரன் ரிசாந் | 111 |
| 58 | யோகேஸ்வரன் அனோஜா | 109 |
| 59 | கருணாநிதி தமிழமுதன் | 105 |
| 60 | கமலதீபன் கீர்த்தனன் | 100 |

## 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் விபரம்

| தொ.இல. | மாணவர் பெயர் | புள்ளி |
|---|---|---|
| 61 | சாந்தகுமார் அக்ஷிகா | 99 |
| 62 | சவுந்தர் ஹர்சனன் | 98 |
| 63 | மகேந்திரன் சுருதிகா | 94 |
| 64 | விஜயகுமார் தனுஸ்ரிகா | 93 |
| 65 | திரவியநாயகம் கிஷோதன் | 93 |
| 66 | சுவர்ணசீலன் அபிலக்ஷன் | 86 |
| 67 | ஐங்கரன் அஸ்வின் | 85 |
| 68 | அனுஸ்காந் வைசாலினி | 83 |
| 69 | தவக்குமார் யதுலக்ஷன் | 83 |
| 70 | செந்தில்குமார் ஆத்மிகா | 81 |
| 71 | கதிர்காமரஞ்சன் ஜகஸ்வினி | 78 |
| 72 | சந்திரசேகர் அபிநாத் | 76 |
| 73 | சபேஸ்குமார் ரிஷி | 70 |

## 70 புள்ளிகளுக்கு கீழ் பெற்றோர் விபரம்

| தொ.இல. | மாணவர் பெயர் | புள்ளி |
|---|---|---|
| 74 | பாலகிருஷ்ணன் திருபரன் | 63 |
| 75 | தெய்வேந்திரன் ஜெகவர்த்தன் | 61 |
| 76 | ராஜ்மோகன் ஆரபி | 31 |

# தமிழ்த் தினப்போட்டி - 2016

| போட்டி இல. | போட்டியின் பெயர் | மாணவர் பெயர் | தரம் | பாடசாலை மட்டம் | கோட்ட மட்டம் | வலய மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | ஆக்கம் - எழுத்து | நித்திலவர்ணன் தக்ஷனா | 5 | 1 | 3 | 3 | |
| | | அனுராகாந்தன் விஸ்வகாந்தன் | 5 | 2 | | | |
| | | ஜெயகாந்தன் ஆற்றலன் | 5 | 3 | | | |
| 15 | வாசிப்பு | சிவகணேசன் அனந்திகன் | 5 | 1 | | | |
| | | பகீரதன் ஆரணி | 5 | 2 | | | |
| | | பிரபாகரன் கரிஸ்மி | 5 | 3 | 3 | 3 | |
| 17 | ஆக்கத்தின் வெளிப்பாடு | சிவகணேசன் அனந்திகன் | 5 | 1 | 2 | - | |
| | | இரஞ்சிதன் துஷோபன் | 5 | 2 | | | |
| | | பிரபாகரன் கரிஸ்மி | 5 | 3 | | | |
| 18 | பேச்சு | வரதராஜா அதிஷயன் | 5 | 1 | | | |
| | | ஜெயகாந்தன் ஆற்றலன் | 5 | 2 | | | |
| | | கஜேந்திரன் கவிவர்ஷா | 5 | 3 | | | |
| 23 | பாவோதல் | பகீரதன் ஆரணி | 5 | 1 | 1 | 1 | 2 |
| | | ராகவன் வலம்புரி | 4 | 2 | | | |
| | | ஞானச்சந்திரன் ஷாகரி | 4 | 3 | | | |
| 28 | இசையும் அசைவும் | ஞானசம்பந்தன் பிரணவி | 4 | 1 | 3 | 2 | - |
| | | ஜெயபாலராஜா காத்யாயினி | 5 | 2 | | | |
| | | கண்ணதாசன் சகானா | 4 | 3 | | | |

# English day - 2016

| தரம் | விடயம் | மாணவர் பெயர் | பா.ம | கோ.ம | வ.ம |
|---|---|---|---|---|---|
| 3 | Copy writing | Pathmarajan Bawishan | 1 | | |
| | | Karunakaran Saruja | 2 | | |
| | | Raveendiran Apatitha | 3 | | |
| 4 | | Uthayakumar Gannika | 1 | | |
| | | Jeyathas Jenusha | 2 | | |
| | | Yogeswaran Niruthika | 3 | | |
| 5 | | Rajanikanth Lamsika | 1 | 3 | 3 |
| | | Gnanamoorthy Neeraja | 2 | | |
| | | Ranjithan Thusopan | 3 | | |
| 3 | Reading Aloud | Roni Akxshana | 1 | | |
| | | Thavarajah Saipriyan | 2 | | |
| | | Mohanathas Gobika | 3 | | |
| 4 | | Varatharaja Premkumar | 1 | | |
| | | Selvakumar Kathirselvan | 2 | | |
| | | Sivakumaran Anojan | 3 | | |
| 5 | | Sivakanesan Ananthikan | 1 | 1 | 2 |
| | | Ranjithan Thusopan | 2 | 2 | 3 |
| | | Varatharaja Athisayan | 3 | | |
| 3 | Poem | Roni Akxshana | 1 | | |
| | | Thivyanathan Vishale | 2 | 1 | 3 |
| | | Renkasamisarma Rishikeshan | 3 | | |
| 4 | | Kannathasan Sahana | 1 | | |
| | | Uthayakumar Gannika | 2 | | |
| | | Thavendiran Abishaan | 3 | | |
| 5 | | Bakeerathan Arany | 1 | | |
| | | Jeyabalarajah Gathiyajini | 2 | | |
| 3 | Story Telling | Thavarajah Saipriyan | 1 | 2 | |
| | | Thivyanathan Vishale | 2 | 1 | |
| | | Senthooran Akshara | 3 | | |
| 4 | | Thavendiran Abishaan | 1 | | |
| | | Surenthiran Piriyanka | 2 | | |
| 5 | | Niththilavarnan Thaksana | 1 | 1 | |
| | | Jeyakanthan Attalan | 2 | 2 | |

## விரைவு கணிதம் - 2016

| | மாணவர் பெயர் | தரம் | பாடசாலை மட்டம் | கோட்ட மட்டம் | வலய மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | யோகேஸ்வரன் ஜசிந்தன் | 2 | 1 | 1 | 2 | |
| 2 | சிற்பரன் ஆரணி | | 2 | 3 | 3 | |
| 3 | திலீபன் அக்ஷரா | | 3 | | | |
| 4 | கேதீஷன் கஜலக்சன் | | 4 | | | |
| 5 | பிரபேஸ்கண்ணன் கிருஷிகி | | 5 | | | |
| 1 | தவராசா சாயிபிரியன் | 3 | 1 | 3 | | |
| 2 | இராஜமோகன் ஶ்ரீஉமேஷ் | | 2 | | | |
| 3 | ரவீந்திரன் அபரிதா | | 3 | | | |
| 4 | சிவலிங்கம் கலைப்பிரியன் | | 4 | | | |
| 5 | உமாகரன் தருண் | | 5 | | | |
| 1 | உதயகுமார் ஹனிகா | 4 | 1 | 3 | 2 | |
| 2 | தவேந்திரன் அபிஷான் | | 2 | | | |
| 3 | நகுலன் ஷங்கீத் | | 3 | | | |
| 4 | புலேந்திரன் தேனுஜா | | 4 | | | |
| 5 | சுரேந்திரன் பிரியங்கா | | 5 | | | |
| 1 | இரஞ்சிதன் துஷோபன் | 5 | 1 | 2 | 3 | |
| 2 | ஜெயகாந்தன் ஆற்றலன் | | 2 | | | |
| 3 | சிறீகந்தசேகரம் ஆரபி | | 3 | | | |
| 4 | சிவகணேசன் அனந்திகன் | | 4 | | | |
| 5 | அனுராகாந்தன் விஸ்வகாந்தன் | | 5 | | | |

## சித்திரப்போட்டி - 2016

| தரம் | மாணவர் பெயர் | பாடசாலை மட்டம் | கோட்ட மட்டம் | வலய மட்டம் |
|---|---|---|---|---|
| 1 | 1. சிவகணேசன் சந்தனா | 1 | | |
| | 2. சிவஸ்ரீ அனுக்ஷயன் | 2 | | |
| | 3. விஜயேந்திரன் கௌசீரஅஞ்சலி | 3 | | |
| 2 | 1. கங்காதரன் வர்ஷா | 1 | 1 | |
| | 2. அனஸ்லி ரவிகாந்தன் மேரிசாளினி | 2 | | |
| | 3. சசிதரன் அபிராமி | 3 | | |
| 3 | 1. இரவீந்திரன் அபரிதா | 1 | 2 | |
| | 2. இராகவன் கம்சிகா | 2 | | |
| | 3. திருமாலழகன் தருண் | 3 | | |
| 4 | 1. தவேந்திரன் அபிஷான் | 1 | 1 | 1 |
| | 2. வசந்தராஜா சுவேத்தா | 2 | | |
| | 3. மதிவண்ணன் கார்த்திகன் | 3 | | |
| 5 | 1. ஆனந்தராஜா ஸ்ரீசன் | 1 | | |
| | 2. அனுராகாந்தன் விஸ்வகாந்தன் | 2 | | |
| | 3. சிறிகந்தசேகரம் ஆரபி | 3 | | |

## விநாடி வினாப்போட்டி - 2016

| இல | மாணவர் பெயர் | கோட்ட மட்டம் | வலய மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|---|
| 1 | சிவகணேசன் அனந்திகன் | 1 | | |
| 2 | வரதராஜா அதிஷயன் | | | |
| 3 | இரஞ்சிதன் துஷோபன் | | | |
| 4 | அனுராகாந்தன் விஸ்வகாந்தன் | | | |
| 5 | ஜெயகாந்தன் ஆற்றலன் | | | |

## செயற்பட்டு மகிழ்வோம் - 2016

| தரம் | கோட்ட மட்டம் | வலய மட்டம் |
|---|---|---|
| 5 | 2 | - |

## ஆங்கில குழுப்பாடல் - 2016

| தரம் | கோட்ட மட்டம் | வலய மட்டம் |
|---|---|---|
| 1, 2 | - | 2 |
| 3, 4 | - | 2 |

# விளையாட்டுப் போட்டி - 2016

| வயது | நிகழ்வு | மாணவர் பெயர் | வகுப்பு | பாடசாலை மட்டம் | கோட்ட மட்டம் | வலய மட்டம் |
|---|---|---|---|---|---|---|
| **ஆண்** | | | | | | |
| 11 | 75m ஓட்டம் | 1. முகுந்தராஜ் பிரஜின் | 5 | 1 | 2 | |
| | | 2. பரணீதரன் ரிஷிகேசன் | 5 | 2 | | |
| | | 3. செல்வராசா கோபிகன் | 5 | 3 | | |
| | 100m ஓட்டம் | 1. முகுந்தராஜ் பிரஜின் | 5 | 1 | 1 | |
| | | 2. பரணீதரன் ரிஷிகேசன் | 5 | 2 | | |
| | | 3. செல்வராசா கோபிகன் | 5 | 3 | | |
| | நீளம் பாய்தல் | 1. செல்வராசா கோபிகன் | 5 | 1 | 3 | |
| | | 2. தில்லைநாதன் வினுசாந் | 5 | 2 | 2 | |
| | | 3. முகுந்தராஜ் பிரஜின் | 5 | 3 | | |
| | உயரம் பாய்தல் | 1. செல்வநாயகம் அபிஷேக் | 5 | 1 | | |
| | | 2. பாஸ்கரன் ஹபிசாந் | 5 | 2 | | |
| | | 3. குணசீலன் ஆதீசன் | 4 | 3 | | |

# விளையாட்டுப் போட்டி - 2016

| வயது | நிகழ்வு | மாணவர் பெயர் | வகுப்பு | பாடசாலை மட்டம் | கோட்ட மட்டம் | வலய மட்டம் |
|---|---|---|---|---|---|---|
| **பெண்** 11 | 75m ஓட்டம் | 1. ஜெயரூபன் ஷர்னிதா | 5 | 1 | | |
| | | 2. குணசேகரம் கம்சா | 5 | 2 | | |
| | | 3. ஞானமூர்த்தி நீரஜா | 5 | 3 | | |
| | 100m ஓட்டம் | 1. ஜெயரூபன் ஷர்னிதா | 5 | 1 | | |
| | | 2. குணசேகரம் கம்சா | 5 | 2 | | |
| | | 3. ஞானமூர்த்தி நீரஜா | 5 | 3 | | |
| | நீளம் பாய்தல் | 1. சிவசுப்பிரமணியம் பிரேமிளா | 5 | 1 | | |
| | | 2. சதீஸ்குமார் இசானி | 5 | 2 | | |
| | | 3. சிவா ஸ்வேதனா | 5 | 3 | | |
| | உயரம் பாய்தல் | 1. சிவசுப்பிரமணியம் பிரேமிளா | 5 | 1 | | |
| | | 2. ஞானமூர்த்தி நீரஜா | 5 | 2 | | |
| | | 3. ஜயந்தன் சகானா | 5 | 3 | | |

## வடக்கு மாகாண முதலமைச்சர் கிண்ண சதுரங்க சுற்றுப்போட்டி - 2016

| தரம் | மாணவர் பெயர் | கோட்ட மட்டம் | வலய மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|---|
| 3 | தவராசா சாயிப்பிரியன் | 1 | 1 | 5 |
| 4 | உதயகுமார் ஹனிகா | 4 | 1 | 7 |
| 4 | ராகவன் வலம்புரி | 3 | - | - |
| 5 | ஜெயகாந்தன் ஆற்றலன் | 2 | 5 | - |
| 5 | செல்வநாயகம் அபிஷேக் | 3 | 4 | 3 |
| 5 | முருகதாஸ் பவித்திரன் | 9 | 8 | - |
| 5 | பகீரதன் ஆரணி | 1 | 4 | 2 |
| 5 | கஜேந்திரன் கவிவர்ஷா | 4 | 7 | - |

வலய மட்டத்தில் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டோர்

தவராசா சாயிப்பிரியன் - தரம் 3

உதயகுமார் ஹனிகா - தரம் 4

## கடந்தகால புலமைப்பரிசில் பெறுபேறுகள்

| ஆண்டு | தோற்றி யோர் | சித்தி பெற்றோர் | 100இற்கு மேல் | 100-70 இடையில் | 70இற்கு கீழ் | வெட்டுப் புள்ளி |
|---|---|---|---|---|---|---|
| 2004 | 81 | 25 | 22 | 18 | 16 | 124 |
| 2005 | 86 | 13 | 27 | 23 | 23 | 124 |
| 2006 | 74 | 22 | 27 | 18 | 07 | 133 |
| 2007 | 74 | 31 | 27 | 08 | 08 | 140 |
| 2008 | 65 | 23 | 09 | 17 | 16 | 114 |
| 2009 | 72 | 28 | 30 | 10 | 04 | 140 |
| 2010 | 59 | 10 | 32 | 12 | 05 | 142 |
| 2011 | 69 | 21 | 35 | 11 | 02 | 151 |
| 2012 | 85 | 23 | 41 | 15 | 06 | 148 |
| 2013 | 80 | 29 | 38 | 08 | 05 | 154 |
| 2014 | 71 | 38 | 28 | 04 | 01 | 158 |
| 2015 | 91 | 34 | 43 | 11 | 03 | 153 |
| 2016 | 76 | 28 | 32 | 13 | 03 | 152 |

# சுற்றாடல் வினா விடைப் போட்டி – 2016

**தரம் - 1**

| | |
|---|---|
| செல்வி சிவகணேசன் சந்தனா | 1ம் இடம் |
| செல்வன் குமரேஸ்வரன் அக்ஷன் | 2ம் இடம் |
| செல்வி விஜேந்திரன் கௌசீரஅஞ்சலி | 3ம் இடம் |
| செல்வி வாசுதேவன் கனுஷ்ரிகா | 4ம் இடம் |
| செல்வி சிவராஸ் டயானிக்கா | 5ம் இடம் |

**தரம் - 2**

| | |
|---|---|
| செல்வன் யோகேஸ்வரன் ஜசிந்தன் | 1ம் இடம் |
| செல்வி சதீசன் யுஸ்மிதா | 2ம் இடம் |
| செல்வி தேவகுமார் துவிதா | 3ம் இடம் |
| செல்வி திலீபன் அக்ஷரா | 4ம் இடம் |
| செல்வி அனெஸ்ரின் ரவிகாந்தன் மேரி சாளினி | 5ம் இடம் |
| செல்வி கபிலன் ஜனுசிகன் | 5ம் இடம் |

**தரம் - 3**

| | |
|---|---|
| செல்வன் பத்மராஜன் பவிஷன் | 1ம் இடம் |
| செல்வன் பிரசாந் நித்திலன் | 2ம் இடம் |
| செல்வி ரவீந்திரன் அபரிதா | 3ம் இடம் |
| செல்வி றொணி அக்ஷனா | 4ம் இடம் |
| செல்வன் அகிலன் தேனமுதன் | 5ம் இடம் |

**தரம் - 4**

| | |
|---|---|
| செல்வன் செந்தூரன் ஆர்த்திகன் | 1ம் இடம் |
| செல்வன் சிவகுமார் அனோஜன் | 1ம் இடம் |
| செல்வன் நிர்மலன் செரோன் | 3ம் இடம் |
| செல்வன் நகுலன் ஷங்கீத் | 4ம் இடம் |
| செல்வி கண்ணதாசன் சகானா | 5ம் இடம் |

**தரம் - 5**

| | |
|---|---|
| செல்வன் சிவகணேசன் அனந்திகன் | 1ம் இடம் |
| செல்வன் இரஞ்சிதன் துஷோபன் | 2ம் இடம் |
| செல்வன் முகுந்தன் ஜகஜித் | 3ம் இடம் |
| செல்வன் ஜெயகாந்தன் ஆற்றலன் | 3ம் இடம் |
| செல்வன் செல்வராஜா கோபிகன் | 5ம் இடம் |
| செல்வி பிரபாகரன் கரிஸ்மி | 5ம் இடம் |

# பாடரீதியான பரிசு பெறுவோர்

**தரம் - 01 (சராசரி 100 புள்ளிகள்)**

1. சுதர்சன் அட்சயன்
2. சுதர்சன் ஆருசன்
3. கனகராசா விஸ்வா
4. சிவசுதன் சகீதன்
5. சிவராஸ் டயானிக்கா
6. சிவகணேசன் சந்தனா
7. செந்தூர்ராசன் கிர்ஷானி
8. விஜயதாஸ் துவீகன்
9. சுரேஸ்குமார் நிதுஸ்சான்
10. சுபானந்தன் கீர்த்திகா
11. லோகேந்திரா கேஜனி
12. மனோகரன் அபிவர்சா

**தரம் - 02**

1. மதிவதணன் அம்ரிதா - கணிதம், சுற்றாடல், தமிழ்
2. மோகனதாஸ் சாருகா - கணிதம்
3. சத்தியரூபன் கபிஷான் - சைவசமயம்
4. மெலோ ஞானசீலன் அலெக்ஷா - கத்தோலிக்க சமயம்
5. யோகேஸ்வரன் ஜசிந்தன் - கணிதம், தமிழ், சைவசமயம்
6. அன்ஸ்லி ரவிகாந்தன் மேரிசாலினி - கணிதம், சுற்றாடல், கத்தோலிக்க சமயம்
7. திலீபன் அக்ஷரா - தமிழ்
8. சதீஸ்குமார் அக்சஜன் - கிறிஸ்தவம்

**தரம் - 03**

1. செந்தூரன் அக்ஷரா - கணிதம், ஆங்கிலம்
2. தவராசா சாயிப்பிரியன் - தமிழ், சுற்றாடல்
3. கமல்ராஜ் ஸய்ரா - சைவசமயம்
4. சிவப்பிரகாசம் கோபினா - ஆங்கிலம்
5. சதீஸ்வரன் திசானா - ஆங்கிலம்
6. கிருஸ்ணகுமார் மனோஜிதா - கணிதம்
7. மோகனதாஸ் கோபிகா - கணிதம், ஆங்கிலம், சமயம், தமிழ், சுற்றாடல்
8. தவரூபன் அபிசேக் - தமிழ்

9. ராஜ்மதன் துவர்ணன் - சைவசமயம்
10. சசிகரன் ஸ்ரீஜனனி - ஆங்கிலம்
11. வைகுந்தன் ரிஷானா - ஆங்கிலம்
12. பத்மராஜன் பவிஷன் - கணிதம், தமிழ், ஆங்கிலம்
13. அகிலன் தேனமுதன் - சைவசமயம், ஆங்கிலம்
14. இராஜமோகன் ஸ்ரீஉமேசன் - சுற்றாடல்
15. றொணி அக்ஷனா - கத்தோலிக்கம்
16. அன்ரன் ரமேந்திரன் றொபேட்ஷன் - கத்தோலிக்கம்

தரம் - 04

1. செந்தூரன் ஆர்த்திகன் - கணிதம், தமிழ், சுற்றாடல்
2. சிவகுமாரன் அனோஜன் - கணிதம், ஆங்கிலம்
3. சாந்தகுமார் பிரகாஷன் - சைவசமயம்
4. நகுலன் ஷங்கீத் - கணிதம், சைவசமயம், ஆங்கிலம்
5. சுபானந்தன் பகீர்த்தனன் - தமிழ்
6. தவேந்திரன் அபிஷான் - சுற்றாடல்
7. சதீஸ்குமார் ஏன்சலின் - கிறிஸ்தவம்
8. யோசேப் ஜெயதாஸ் ஜெனுஷா - கத்தோலிக்கம்
9. புலேந்திரன் தேனுஜா - கணிதம், தமிழ், சைவசமயம்
10. விஜயரத்தினம் சீராளன் - சுற்றாடல், ஆங்கிலம்

தரம் - 05

1. கஜேந்திரன் கவிவர்ஷா - கணிதம்
2. சிவகணேசன் அனந்திகன் - தமிழ், சுற்றாடல், ஆங்கிலம், சைவசமயம்
3. அனுராகாந்தன் விஸ்வகாந்தன் - கணிதம்
4. இரஞ்சிதன் துஷோபன் - தமிழ், சுற்றாடல், ஆங்கிலம், சைவசமயம்
5. சதீஸ்குமார் இசானி - கிறிஸ்தவம்
6. ஜெயகாந்தன் ஆற்றலன் - கணிதம், தமிழ், சுற்றாடல், ஆங்கிலம், கத்தோலிக்கம்
7. சூரியஜெயா மலரவன் - சைவசமயம்
8. பாஸ்கரன் ஹரிசாந் - சைவசமயம்
9. நித்திலவர்ணன் தக்ஷனா - தமிழ்
10. சிறிகந்தசேகரம் ஆரபி - கணிதம்
11. முகுந்தன் ஜகஜித் - சைவசமயம்

## வரவு ஒழுங்கு 31.11.2016 (172 நாட்கள்)

**தரம் - 02**

1. தங்கவேலாயுதம் கேசவன்

**தரம் - 03**

1. பத்மராஜன் பபிஷன்

**தரம் - 04**

1. மதிவண்ணன் கார்த்திகன்
2. மோகனதாஸ் தமிழகன்
3. அசோக்குமார் அபிஷன்
4. புலேந்திரன் தேனுஜா

**தரம் - 05**

1. தேவராஜா விதுசனன்
2. பத்மராஜன் டேனுஷன்
3. பகீரதன் ஆரணி

# பாடசாலைக் கீதம்

*பல்லவி*

வாழ்க வாழ்க வாழ்கவே - பாலர்
வாழ்வின் கூடமான பாடசாலை வாழ்கவே

*அனுபல்லவி*

நெல்லியடி மெதடிஸ்த நேரில்லா நம் பாடசாலை
எல்லையேதும் இல்லையென்று வாழ்க வாழ்க வாழ்கவே

*சரணம்*

அன்பு தேடும் பாலர் அருமைத் தமிழின் நிழலிலே
இன்பினோடு இதயகானம் இனிமையாகப் பாடியே
இன்ப வாழ்வு பெற்று நாம் இறைவன் பாதம் சூடியே
தென்பு பெற்ற மனிதராய் தெளிவினோடு வாழுவோம்

சாஸ்திரங்கள் கற்று நாம் தரணியெங்கும் ஓங்கியே
நேத்திரமாய் எண்ணெழுத்து நேர்த்தியாக நாம் பெற
அகத்தகத் தகத்திலே ஒன்றிணைந்த கல்வியை
தகத்தக தமக்கருள் தாயதான பாடசாலை.

வைத்த கால் எடுத்திடாமல் வாழ்வில் முன்னெடுத்துமே
நித்த நித்த நீடு நாங்கள் நீர்மை மேவு கல்வியை
சித்த மீதுருத்தியே சீரிதான நம்மினம்
மெத்த மெத்த மேலிட கற்ற வாறொழுகுவோம்.

ஆக்கம்
***பண்டிதர் வேலாயுதம்***
(முன்னைநாள் அதிபர்)

தமிழ்ப்பூங்கா, நெல்லியடி - 0212264014